சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 103/2020

PW - 1

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | மகஜாபீம் |
| க.பெ. (அ) த.பெ. | முன்னாமுகமது |
| வயது | 58 |
| முகவரி | பொள்ளாச்சி |

**மனுவின் பேரிலான முதல் விசாரணையின் தொடர்ச்சி**

1.மசாஆ 15 - எனது கணவரின் பான் கார்டு நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

2.மசாஆ 16 - எனது பான் கார்டு நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு இறந்து போன சுலைமானை தவிர எத்தனை குழந்தைகள் என கேட்டால் 2 ஆண் மகன்கள் உண்டு. அதில் ஒரு மகன் சுலைமானுக்கு முத்தவர், இன்னொரு மகன் இளையவர். அவர்கள் பராமரிப்பில் தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல அவர்கள் தனியாக வசித்து வருகிறார்கள் சுலைமானுக்கு விபத்து சமயத்தில் திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். சுலைமானுக்கு விபத்து சமயத்தில் எந்த தொழிலும் இல்லை என்றும் அதனால் தான் நண்பர்களுடன் சேர்ந்து

கார் வாங்குவதற்கு பட்டுக்கோட்டை சென்றார் என்று சொன்னால் அது சரியல்ல, எனது மகன் பெயின்டிங் தொழிலும் கார் வாங்கி விற்கும் தொழிலும் செய்து வந்தார். எனது மகனுக்கு சரியான வேலை இல்லை என்றும் அதனால் எந்த வருமானமும் இல்லை என்றால் சரியல்ல, எனது மகனுக்கு எந்த வேலையும் இல்லாத காரணத்தினால் தான் 3 வேலைகளை மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. அதனால் விபத்திற்கு யார் காரணம் என சொல்ல இயலாது என்று சொன்னால் சரிதான். விபத்திற்கு முழு காரணம் கார் ஓட்டுநரின் அஜாக்கரதையும் கவனக்குறைவு தான் காரணம் என்றும் அதனால் தான் 4 ம் எதிர்மனுதாரர் மினி பஸ் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் ஓட்டி சென்ற காரின் ஓட்டுநரான 4 ம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்றும் ஆனால் அதனை மாற்றி 1ம் எதிர்மனுதாரர் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆம்னி பேருந்தானது பயணிகளை ஏற்றிக்கொண்டு அதன் ஓட்டுநர் கவனமாக வாகனத்தை ஓட்டி சென்றார் என்றும் எனது மகன் சென்ற வாகனத்தின் ஓட்டுநர் தான் கவனக்குறைவாக ரோட்டின் குறுக்கே கார் ஓட்டியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த மனுவில் நான் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் மீது தான் இழப்பீடை கோரியுள்ளேன் என்றால் சரிதான். நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

**<u>6 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது மகன் பயணம் செய்த காரின் காப்பீடானது பூமிநாதன் என்பவரது பெயரில்

உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 8 ஆவணத்தில் உரிமையாளர் பெயர் பூமிநாதன் என்று தான் உள்ளது என்றால் சரிதான். எனது மகன் ஓட்டி சென்ற காரின் ஓட்டுநர் கவனத்துடன் காரை ஓட்டி சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கேள்வி பட்ட வகையில் காரின் ஓட்டுநர் காரை கவனமாக ஓட்டி சென்றார் என்றால் சரிதான். நான் கேள்வி பட்ட வகையில் ஆம்னி பஸ்ஸின் ஓட்டுநர் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரிதான். அந்த ஆம்னி பஸ்ஸின் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகன் இறந்ததற்கு இழப்பீடு கொடுக்க வேண்டியது யார் என கேட்டால் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள். எனது மகன் பயணம் செய்த காரின் ஓட்டுநரால் எந்த கவனக்குறைவும் இல்லாத நிலையில் இந்த மனுவானது 6ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி